# அபிவிருத்திக்கான உரிமை மீதான பிரகடனம்

## டிசம்பர் 4, 1986 அன்று பொதுச் சபைத் தீர்மானம் 41/128 மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

**பொதுச் சபையானது,**

ஒரு பொருளாதார, சமூக, கலாச்சாரங்களின் சர்வதேச அல்லது மனிதாபிமானத் தன்மையான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சர்வதேச ஒத்துழைப்பை எட்டுவது தொடர்பாகவும், மற்றும் சாதி, பால், மொழி அல்லது மதம் என்ற பாகுபாடுகளின்றி அனைவருக்குமான மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றுக்கான மதிப்பை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தலில் ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் குறிக்கோள்கள் மற்றும் கோட்பாடுகளை மனதில் கொண்டும்,

அபிவிருத்தியென்பது ஓர் விரிவான பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் செயன்முறை என்பதையும், அது அபிவிருத்தி மற்றும் அதன் மூலம் பெறப்படும் நன்மைகளின் நியாயமான பகிர்ந்தளிப்பிலான அவர்களது செயலார்வம், சுதந்திரமான மற்றும் அர்த்தமுள்ள பங்குபற்றுதல்களின் அடிப்படையில் முழு மக்கட்தொகை மற்றும் அனைத்துத் தனிப்பட்டவர்களினதும் நன்னிலைகளின் தொடர்ச்சியான மேம்படுத்துதலை இலக்காகக் கொண்டுள்ளது என்பதை அங்கீகரித்தும்,

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் ஏற்பாடுகளின் கீழ், ஒவ்வொருவரும் ஒரு சமூக மற்றும் சர்வதேச ஒழுங்குக்கு உரித்துடையவர்கள் என்பதையும் அதில் அந்தப் பிரகடனத்தில் சொல்லப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரம் முழுமையாக பயனுறப்படுவதற்கு முடியுமென்பதைக் கவனத்தில் கொண்டும்,

பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேசப் உடன்படிக்கைகள் மற்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசப் உடன்படிக்கைகள் என்பவற்றின் ஏற்பாடுகளை நினைவுபடுத்தியும்,

பட்டயத்திற்கு அமைவாக அரசுகளுக்கிடையில் காலனித்துவத்தை ஒழித்தல், பாரபட்சத்தைத் தடுத்தல், மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றின் கடைப்பிடித்தலுக்கான மதிப்பு, உலகளாவிய சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றைப் பேணுதல் மற்றும் நட்புரீதியான உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகளை மேலும் முன்னேற்றுதல் தொடர்பான உடன்படிக்கைகள் உட்பட, மனிதப் பிறவிகளின் உள்ளார்ந்த அபிவிருத்தி, அனைத்து ஆட்களினதும் பொருளாதார, சமூக முன்னேற்றங்கள் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மற்றும் அதன் விசேட முகவரமைப்புகளின் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள், சமவாயங்கள், தீர்மானங்கள், பரிந்துரைகள் மற்றும் ஏனைய சாதனங்களை மேலும் நினைவுபடுத்தியும்,

தங்களது அரசியல் அந்தஸ்தை தீர்மானிக்கவும் மற்றும் தங்களது பொருளாதார சமூக மற்றும் கலாச்சார அபிருத்தியைத் தொடர்வதற்கும் அவர்கள் சுதந்திரமான உரிமையைக் கொண்டுள்ள தன்மையினால், சுயநிர்ணயத்துக்கான மக்களின் உரிமையை நினைவில் கொண்டும்,

மனித உரிமைகள் மீதான இரண்டு சர்வதேசப் பொருத உடன்படிக்கைகளினதும் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டும், அவர்களது அனைத்து இயற்கைச் செல்வங்கள் மற்றும் வளங்கள் மீது முழுமையானதும் மற்றும் முற்றிலுமான இறையாண்மையை செயற்படுத்துவதற்கான மக்களின் உரிமையையும் நினைவில் கொண்டும்,

சாதி, நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயம், தேசியம் அல்லது சமூகத் தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற ஏதேனும் வேறுபாடின்றி, அனைவருக்குமான மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் என்பவற்றுக்கான சர்வதேச மதிப்பு மற்றும் கடைப்பிடித்தலை மேம்படுத்துவதற்கு பட்டயத்தின் கீழ் அரசுகளின் கடப்பாடுகளை கவனத்தில் கொண்டும்,

காலனித்துவம், நவீன காலனித்துவம், நிறவேற்றுமை, அனைத்து வகையிலான இனத்துவேஷம் மற்றும் இனத்துவேஷப் பாரபட்சம், தேசிய இறையாண்மை, தேசிய ஒற்றுமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு எதிரான அந்நிய ஆதிக்கம், ஆக்கிரமிப்பு, வலுவுள்ள தாக்கம், அச்சுறுத்தல்கள் மற்றும் யுத்த அச்சுறுத்தல்கள் போன்றவற்றிலிருந்து எழுகின்ற நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட

மக்கள் மற்றும் தனிப்பட்டவர்களது மனித உரிமைகளின் பாரியதும் மற்றும் அப்பட்டதுமான மீறல்களை இல்லாதொழித்தல் மனிதகுலத்தின் ஒரு பெரும்பகுதியின் அபிவிருத்திக்குச் சாதகமான சந்தர்ப்ப சூழ்நிலைகளை உருவாக்குவதற்குப் பங்களிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டும்,

அபிவிருத்தி, அதே போன்று மனிதப் பிறவிகள் மற்றும் மக்களினது முழுமையான தேவைப் பூர்த்தி குடியியல், அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளின் மறுதலித்தல்களோடு உருவாகிய கடுமையான தடைகள் இருப்பதில் கரிசனையைக் கொண்டும், மற்றும் அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் என்பன தனியாக வேறுபடுத்தப்பட முடியாதவை என்பதோடு ஒன்றிலொன்று இடைச்சார்பு கொண்டது என்பதையும் மற்றும் அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு குடியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளின் அமுல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதலுக்கு சமனான கவனம் மற்றும் உடனடியான கவனம் செலுத்துதல் என்பன அளிக்கப்படல் வேண்டுமென்பதையும், அதற்கமைய சில மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களின் அனுபவித்தலுக்கான மதிப்பின் மேம்படுத்துதல் ஏனைய மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களின் மறுக்கப்படுதலை நியாயப்படுத்தாது என்பதைக் கருத்தில் கொண்டும்,

அபிவிருத்திக்கான உரிமை பயனுறுவதற்கு சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பன அத்தியாவசியமான அம்சங்கள் என்பதைக் கவனத்தில் கொண்டும்,

படைவலுக் குறைத்தல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கிடையில் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதையும் மற்றும் படைவலுக் குறைத்தலிலான முன்னேற்றம் அபிவிருத்தித் துறையிலான முன்னேற்றத்தை கணிசமாக முன்னேற்றும் என்பதையும் மற்றும் படைவலுக் குறைத்தல் மூலம் விடுவிக்கப்படும் வளங்கள் அனைத்து மக்களினதும், குறிப்பாக வளர்முக நாடுகளின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு ஒதுக்கப்படுதல் வேண்டுமென்பதை மீள்வலியுறுத்தியும்,

அபிவிருத்திச் செயன்முறையின் மையப் பொருள் மனிதன் என்பதையும் அதனால் அந்த அபிவிருத்திக் கொள்கை மனிதப் பிறவியை அபிவிருத்தியின் பிரதான பங்குபற்றுனராகவும் மற்றும் பயனாளியாகவும் ஆக்குவதை அங்கீகரித்தும்,

மக்கள் மற்றும் தனிப்பட்டவர்களது அபிவிருத்திக்கு, சாதகமான நிலைமைகளை உருவாக்குவது அவர்களது அரசுகளின் முதன்மையான பொறுப்பு என்பதை அங்கீகரித்தும்,

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் பாதுகாப்பதற்கும் சர்வதேச மட்டத்திலான முயற்சிகள் ஓர் புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளால் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை அறிந்து கொண்டும்,

அபிவிருத்திக்கான உரிமை, பராதீனப்படுத்தப்பட முடியாத மனித உரிமை என்பதோடு, அபிவிருத்திக்கான வாய்ப்பின் சமத்துவம் நாடுகளை உருவாக்கும் தேசிய மக்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் ஆகிய இருவரதும் ஒரு மீயுரிமையாகும் என்பதை உறுதிப்படுத்தியும்,

அபிவிருத்திக்கான உரிமை மீதான பின்வரும் பிரகடனத்தை அதிகாரபூர்வமாக வெளியிடுகின்றது:

**உறுப்புரை 1**

1. ஒவ்வொரு மனிதனும் மற்றும் அனைத்து ஆட்களும் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் அபிவிருத்தியில் பங்குபற்றுவதற்கு, பங்களிப்பதற்கு மற்றும் அனுபவிப்பதற்கு உரித்துடைய தன்மையினாலும், அதில் அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் என்பன முழுமையாகப் பயனுறுப்பட முடியுமென்பதலினாலும், அபிவிருத்திக்கான உரிமை பராதீனப்படுத்தப்பட முடியாத ஒரு மனித உரிமையாகும்.

2. அபிவிருத்திக்கான மனித உரிமை, சுயநிர்ணயத்துக்கான மக்களின் உரிமையின் முழுமையான பயனுறுதலையும் கூட பொருள் கொள்கின்றது, அது, மனித உரிமைகள் மீதான இரு சர்வதேசப் உடன்படிக்கைகளின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கான உட்படுதல், தங்களது அனைத்து இயற்கைச் செல்வங்கள் மற்றும் வளங்கள் மீது முழுமையான இறையாண்மைக்கான அவர்களது பராதீனப் படுத்தப்பட முடியாத உரிமையின் செயற்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

**உறுப்புரை 2**

1. அபிவிருத்தியின் மையப் பொருள் மனித ஆள் ஆவரென்பதுடன் அவர் அபிவிருத்திக்கான உரிமையின் செயலூக்கத்துடனான பங்குபற்றுனராகவும் மற்றும் பயனாளியாகவும் இருத்தல் வேண்டும்.

2. அபிவிருத்திக்கான ஒரு பொறுப்பை அனைத்து மனிதப் பிறவிகளும் கொண்டுள்ளனர், தனியாகவும் மற்றும் கூட்டாகவும், அவர்களது மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தின் முழுமையான மதிப்பு, அதே போன்று சமூகத்துக்கான அவர்களது கடமைகளைக் கவனத்தில் கொள்ளுதல் என்பவற்றின் தேவை மட்டுமே மனிதப் பிறவியாவதன் சுதந்திரமான மற்றும் முற்றிலுமான நிறைவடைதலை உறுதிசெய்ய முடியும், ஆதலால் அவர்கள் அபிவிருத்திக்கான ஒரு பொருத்தமான அரசியல், சமூக மற்றும் பொருளாதார ஒழுங்கை மேம்படுத்திப் பாதுகாத்தல் வேண்டும்.

3. அபிவிருத்தியில் செயலூக்கத்துடனான, சுதந்திரமான மற்றும் அர்த்தமுள்ள பங்குபற்றுதல் மற்றும் அதிலிருந்து பெறப்படும் நன்மைகளின் நியாயமான பகிர்தல் என்பவற்றின் அடிப்படையில் முழுமையான மக்கட் தொகை மற்றும் அனைத்து தனிப்பட்டவர்களினதும் நன்னிலைகளின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு பொருத்தமான தேசிய அபிவிருத்திக் கொள்கைகளை உருவாக்குவதற்கான உரிமையையும் மற்றும் கடமையையும் அரசுகள் கொண்டுள்ளன.

**உறுதிகள் 3**

1. அபிவிருத்திக்கான உரிமையின் பயனுறுதலுக்குச் சாதகமான தேசிய மற்றும் சர்வதேச நிலைமைகளை உருவாக்குவதற்கான முக்கிய பொறுப்பை அரசுகள் கொண்டுள்ளன.

2. அபிவிருத்திக்கான உரிமையின் பயனுறுதல், ஐக்கிய நாடுகளின் பட்டயத்திற்கமைவாக நாடுகள் மத்தியில் சிநேகபூர்வமான உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பாக சர்வதேசச் சட்டக் கோட்பாடுகளுக்கான முழுமையான மதிப்பைத் தேவைப்படுத்துகின்றது.

3. அபிவிருத்தியை உறுதிசெய்வதற்கும் மற்றும் அபிவிருத்திக்கான தடைகளை இல்லாதொழிப்பதில் ஒன்றோடொன்று ஒத்துழைப்பதற்கான கடப்பாட்டை அரசுகள் கொண்டுள்ளன. அனைத்து அரசுகளிடையேயும் இறையாண்மைச் சமத்துவம், இடைச்சார்பு, பரஸ்பர ஆர்வம் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றின் அடிப்படையிலான ஒரு புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கை முன்னேற்றுவதற்கும், அதே போன்று மனித உரிமைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் பயனுறுதல் என்பவற்றை ஊக்குவிக்குமொரு வகையில் அரசுகள் தங்கள் உரிமைகளைப் பயனுறுதல் வேண்டுமென்பதுடன் தங்களது கடமைகளைப் பூர்த்தி செய்தலும் வேண்டும்.

**உறுப்புரை 4**

1. அபிவிருத்திக்கான உரிமையின் முழுமையான பயனுறுதலுக்கு வசதியளிக்கும் ஒரு நோக்கில் சர்வதேச அபிவிருத்திக் கொள்கைகளை உருவாக்குவதற்கு, தனியாகவும் மற்றும் கூட்டாகவும், நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசுகள் கடப்பாட்டைக் கொண்டுள்ளன.

2. அபிவிருத்தியடையும் நாடுகளின் துரித அபிவிருத்தியை மேலும் முன்னேற்றுவதற்கு நீடித்த உறுதியான நடவடிக்கை தேவைப்படுகிறது. அபிவிருத்தியடையும் நாடுகளின் முயற்சிகளுக்கான ஒரு முழுமைப்படுத்தலாக, இந்த நாடுகள், அவற்றின் விரிவான அபிவிருத்தியைப் பேணுவதற்கு பொருத்தமான வழிவகைகள் மற்றும் வசதிகளை அளிப்பதில் பயனுறுதியான சர்வதேச ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும்.

**உறுப்புரை 5**

நிறவேற்றுமை, அனைத்து வடிவிலான இனத் துவேஷம் மற்றும் இனத் துவேஷ பாரபட்சம், காலனித்துவம், அந்நிய ஆதிக்கம் மற்றும் ஆக்கிரமிப்பு, வலுத்தாக்கம், அந்நியத் தலையீடு மற்றும் தேசிய இறையாண்மை, தேசிய ஒற்றுமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு, யுத்த அச்சுறுத்தல்கள் மற்றும் மக்களின் சுயநிர்ணயத்துக்கான அடிப்படை உரிமையை அங்கீகரிக்க மறுத்தல்

என்பவற்றிலிருந்து எழுகின்ற நிலைமைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் மனிதப்பிறவிகளின் மனித உரிமைகளின் பாரிய மற்றும் அப்பட்டமான மீறல்களை இல்லாதொழிப்பதற்கு அரசுகள் தீர்மானமிக்க நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**உறுப்புரை 6**

1. சாதி, பால், மொழி அல்லது மதம் என்ற எந்தப் பாகுபாடின்றி அனைவருக்குமான அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் என்பவற்றை முன்னேற்றுதல், ஊக்குவித்தல் மற்றும் சர்வதேச மதித்தல் மற்றும் கடைப்பிடித்தலை வலுப்படுத்துதல் என்பவற்றுக்கான ஒரு நோக்கோடு அனைத்து அரசுகளும் ஒத்துழைத்தல் வேண்டும்.

2. அனைத்து மனித உரிமைகளும் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களும் வேறுபடுத்தப்பட முடியாதவையும் இடைச்சார்புடையவையுமாகும்; குடியியல், அரசியல், பொருளாதார, சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளின் அமுல்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்கு சமனான கவனமும் மற்றும் உடனடியான கவனங் கொள்ளுதலும் அளிக்கப்படல் வேண்டும்.

3. குடியியில் மற்றும் அரசியல் உரிமைகள், அதே போன்று பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை கடைப்பிடிக்கத் தவறுதலில் இருந்து எழுகின்ற அபிவிருத்திக்கான தடைகளை இல்லாதொழிப்பதற்கு அரசுகள் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

**உறுப்புரை 7**

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை ஸ்தாபித்தல், பேணுதல் மற்றும் வலுப்படுத்தல் என்பவற்றை அனைத்து அரசுகளும் முன்னேற்றுதல் வேண்டும் மற்றும், அதற்கு, பயனுறுதியான சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் பொதுவானதும் மற்றும் முழுமையானதுமான படைக்குறைத்தலை எட்டுவதற்கும், அதே போன்று பயனுறுதியான படைவலுக்குறைப்பினால் விடுவிக்கப்படும் வளங்கள் விரிவான அபிவிருத்திக்காக, குறிப்பாக வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்காக உபயோகிக்கப் படுவதை உறுதிசெய்வதற்கும், தங்களால் இயலுமான உச்ச அளவை அரசுகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**உறுப்புரை 8**

1. அபிவிருத்திக்கான உரிமையின் பயனுறுதலுக்கானதும், மற்றும் அவற்றிடையே, அடிப்படை வளங்கள், கல்வி, சுகாதார சேவைகள், உணவு, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு என்பவற்றுக்கான அவர்களது வழிமுறைகளில் அனைவருக்குமான சமனான வாய்ப்பு மற்றும் வருமானத்தின் நியாயமான பகிர்வையும் உறுதிப்படுத்துவதற்கான அனைத்து அவசியமான முறைமைகளையும் தேசிய மட்டத்தில், அரசுகள் மேற்கொள்ளுதல் வேண்டும். அபிவிருத்திச் செயன்முறைகளில் பெண்கள் ஓர் செயலூக்கத்துடனான வகிபாகத்தைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பயனுறுதியான முறைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அனைத்து சமூக அநீதிகளையும் அகற்றும் நோக்குடன் பொருத்தமான பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. அனைத்து மனித உரிமைகளின் அபிவிருத்தி மற்றும் முழுமையான பயனுறுதலின் ஓர் முக்கியமான காரணியாக அனைத்து செயற்பரப்புகளிலும் பொதுமக்கள் சார்ந்த பங்குபற்றுதலை அரசுகள் ஊக்குவித்தல் வேண்டும்.

**உறுப்புரை 9**

1. தற்போதைய பிரகடனத்தில் சொல்லப்பட்டுள்ள அபிவிருத்திக்கான உரிமையின் அனைத்து அம்சங்களும் தனித்து வேறாக்கப்பட முடியாதவையும் இடைசார்பும் கொண்டவை என்பதோடு அவை ஒவ்வொன்றும் முழுமையான சூழ்நிலையில் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

2. தற்போதைய பிரகடனத்திலுள்ள எவையுமே, ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றுக்கு முரண்பாடானவையாகவும், அல்லது சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் மற்றும் மனித உரிமைகள் மீதான சர்வதேசப் உடன்படிக்கைகள் என்பவற்றில் சொல்லப்பட்டுள்ள உரிமைகளின் மீறல்களை இலக்காகக் கொண்டு ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அல்லது ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஏதேனும் நாடு, குழு அல்லது நபர் ஒரு உரிமையைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுவதாகப் பொருள் கொள்ளப்படுதல் கூடாது.

**உறுப்புரை 10**

கொள்கை உருவாக்கம், ஏற்றுநடாத்துதல் மற்றும் அமுல்படுத்துதுல், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் சட்டவாக்க மற்றும் ஏனைய முறைமைகள் உட்பட அபிவிருத்திக்கான உரிமையின் முழுமையான அப்பியாசம் மற்றும் முன்னேற்றமான மேம்படுத்துதல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.